

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (2.5.2026), சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரமைப்பின் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, பொருளாளர் ஏ.எம்.சதக்கத்துல்லா, மாநில கூடுதல் செயலாளர் சேப்பாக்கம் வி.பி. மணி, மாவட்ட தலைவர்கள் என்.டி. மோகன், எஸ் சாமுவேல், பி. ஆதிகுருசாமி, ஒய். எட்வர்ட் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, மே–5ஆம் தேதி 43வது வணிகர் தினத்தையொட்டி திருவாரூரில் நடைபெற உள்ள ”வணிகர் விழிப்புணர்வு எழுச்சி மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள். அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா,எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.





திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில், வாக்கு எண்ணிக்கையின் போது முகவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க சட்டத்துறைச் செயலாளர் வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ கலந்துகொண்டு, வாக்கு எண்ணும் மையங்களில் முகவர்கள் எவ்வாறு விழிப்புடன் செயல்பட வேண்டும் என்பது குறித்து உரையாற்றினார். கூட்டத்திற்கு திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்தார்.

### மயிலம் சட்டமன்றத் தொகுதி :

# வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கூட்டம்!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரை: செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, மே 4 –

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட் கழக நிர்வாகிகள் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது. விழுப்பு ரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்,பி. கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில் நடைபெற்ற மைலம் சட்டமன்றத் தொகுதியில்தேர்தலில் பணியாற்றிய ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள், கழக செயலாளர்கள். உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொண்ட கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி. மே 4 ஆம் தேதி திண்டிவனம் அரசு பொறியியல் கல்லூரியில் மைலம் சட்டமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கையின் போது வாக்கு எண்ணும் முகவர்க ள்கவன முடன் விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

ஒவ்வொரு சுற்று வாக்குப்பதிவின் எண்ணிக்கையை கண்காணிக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் கடைசி சுற்று வரை வாக்கு எண்ணிக்கை முகவர்கள் விழிப்புடன் இருந்து கண்காணித்து பணியை மேற்கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து வாக்கு எண்ணிக்கையில் பங்கேற்க உள்ள வாக்கு எண்ணிக்கை முகவர்களுக்கு அடையாள அட்டையை கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத் ரட்சகன் எம்பி வழங்கினார்.

கூட்டத்தில் மயிலம் சட்டமன்றத் தொகுதி தேமுதிக வேட்பாளர் வெங்கடேசன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய கழக செயலாளர்கள் அண்ணாதுரை, ராஜா ராமன், மொடையூர் துரை,மணி மாறன், செழியன், இளம்வழுதிஉள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர்வாகிகள் பாக முகவர்கள், அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் மற்றும் வானூர் சட்டமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கைக்கு செல்லும் முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டம், விழுப்புரம் , கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில், காணொலி காட்சி வாயிலாக, கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ , கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் தலைமையில், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர், விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. உடன் வானூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தி.கௌதம் திராவிடமணி, மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் விழுப்புரம் இரா.ஜனகராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை

# பாக முகவர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிக்கை!



*கள்ளக்குறிச்சி,மே. 4 -*

*கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பாக ரிஷிவந்தியம் தொகுதியில் தொடர்ந்து 3வது முறையாக போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளருமான வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.*

*கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் அனைவருக்கும் வணக்கம்,*

*கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 370 வாக்குப் பதிவு மையங்களில் பதிவாகிய வாக்குகள் சின்னசேலம் அருகில் உள்ள பங்காரம் லட்சுமி கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் எண்ணப்படுகிறது. மேலும் ரிஷிவந்தியம் தொகுதியில் மொத்தம் 350 வாக்குப்பதிவு மையங்களில் பதிவாகிய வாக்குகள் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் மொத்தம் 375 வாக்குப்பதிவு மையங்களில் பதிவாகிய வாக்குகள் என இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்கும் கள்ளக்குறிச்சி அடுத்த இந்திலி ஆர்.கே.எஸ் கல்லூரி வளாகத்தில் வாக்குகள் எண்ணப்படுகிறது.*

*இதில் கள்ளக்குறிச்சி (தனி) சட்ட மன்ற தொகுதியில் 27 சுற்றுகளாகவும், ரிஷிவந்தியம் தொகுதியில் 25 சுற்றுகளாகவும், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 27 சுற்றுகளாக மின்னணு வாக்குப்பதிவு எண்ணப் படுகிறது. முதலாவதாக காலை 8 மணியளவில் தபால் வாக்குகள் என்னும் பணிகள் தொடங்குகிறது. எனவே, அந்தந்த தொகுதிகளின் வாக்கு எண்ணும் மையத்திற்கு செல்லக்கூடிய முகவர்கள் தேர்தல் ஆணையத்தால் தங்களுக்கு வழங்கப்பட்ட உரிய அடையாள அட்டைகளுடன் காலை 7 மணிக்குள் செல்ல வேண்டும். மேலும் ஒவ்வொரு பூத்வாரியாக மின்னணு வாக்குப் பதிவுகள் எண்ணப்படும் போது முகவர்கள் மிகுந்த கவனமுடன் நிதானமாக செயல்பட வேண்டும். தபால் வாக்குகள் எண்ணும் போதும் அந்தந்த தொகுதி முகவர்கள் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*


